எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், பாகுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் கேட்டதற்கு நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இல்லையென்றுதான் சொல்லி இருக்கிறேனே தவிர, சாதாரணப் பேருந்துகள், 4 பேருந்துகள் 8 நடைகள் ஏற்கெனவே இயக்கப்படுகின்றன. அந்த 8 நடைகள் இயக்கப்பட்ட போதிலும்கூட, அந்த 8 நடைகளிலுமே பயணிகளுடைய விகிதாச்சாரம் இப்போது குறைவாக இருக்கிறது. சொல்லப் போனால், நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு வருகின்ற அந்த 4 பேருந்துகளிலும் 71 விழுக்காடுதான் பயணிகள் சராசரியாகப் பயணம் செய்கிறார்கள். 100 விழுக்காடு பயணிகள் பஸ்ஸில் பயணம் செய்தால் கூடுதல் பேருந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகளிலேயே போதுமான அளவிற்குப் பயணிகள் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, புதியதாக ஒரு பேருந்து விடுவதற்கு வாய்ப்பில்லை என்றுதான் நான் சொன்னேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொகுசுப் பேருந்தாக இயக்கினால் இன்னும் ஒருவேளை கூடுதலாகப் பயணிகள் வருவார்கள் என்ற கருத்தில் அவர்கள் சொல்லியிருப்பதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அவர்கள் சொன்னதுபோல அவர்களுடைய நன்றியைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 188, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

188—

தொழிற்பேட்டை

***7255—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

2003 ஏப்ரல் 7]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புவியிலே இருக்கும் தமிழர்கள் எல்லாம் போற்றுகின்ற தமிழ்த் தாயே! புரட்சி என்ற சொல்லுக்குப் புத்துணர்ச்சி தந்த புதிய விடியலே! கண்ணியம் காக்கின்ற காலத்தின் வித்தகமே! தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் அம்மா! மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியானது மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருந்து வருகிறது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மிகுதியாக வசித்து வருகின்றனர். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இஸ்லாமியப் பெருமக்கள், சீர்மரபினர் வாழ்கின்ற பகுதியாக அது இருந்து வருகிறது. இந்த நிலையிலே, கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே எல்லா தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கும் மூடுவிழா செய்துவிட்டனர். வறட்சியின் காரணமாக, விவசாயப் பெருங்குடி மக்கள் வேலையிழந்து வருகின்றனர்..............

முற்பகல் 10-35

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே உறுப்பினர் குற்றச்சாட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ஒன்றும் குற்றச்சாட்டு அல்ல; உட்காருங்கள்.

செல்வி சி. கனகதாரா: குடிசைத் தொழில் செய்துவந்த பீடித் தொழிலாளர்களும் நலிவுற்று வாழ்ந்து வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2003 ஏப்ரல் 7

செல்வி சி. கனகதாரா: வேலையில்லாப் பட்டதாரிகளும், படித்த இளைஞர்களும் வேலையின்றித் தவித்து வருகின்றனர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழைப்பவர் உயர்ந்தால்தான் உலகம் ஏற்றம் பெறும் என்ற உரிமைக் குரலை உறுதியாக எழுப்பியவர் பாவேந்தர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

செல்வி சி. கனகதாரா: புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் தொழில் முன்னேற்றத்தைக் காட்டி வரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே இதனை மறுபரிசீலனை செய்து, பேரணாம்பட்டு தொகுதியில் ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியில் போதுமான தொழில் முனைவோர் முன்வராத காரணத்தால், தற்சமயம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் சிட்கோவிடம் இல்லை. மேலும், பேரணாம்பட்டு தொகுதியில் போதுமான தொழில் முனைவோர் வந்தால், தொழிற்பேட்டை ஆரம்பிக்கத் தகுந்த இடம் கிடைக்குமானால், சிட்கோ தொழிற்பேட்டையை வருங்காலத்தில் அமைக்க சிட்கோ நிறுவனத்தால் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு பணிவான வேண்டுகோள். கேள்வி நேரத்தில் எந்தவிதமான குற்றச்சாட்டும் ஒரு உறுப்பினர் மீது கூறக்கூடாது.

வினா எண் 189, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

189—

துணை மின் நிலையம்

***22851—திருமதி செ. சுந்தராம்பாள்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—